அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI



Phone : 044-2814 3306, 2814 3307, fax : 044-4212 4624, e-mail : orsk14@gmail.com

அ.எண்:111/2016
தேதி:28.06.2016

**28.06.2016 அன்று சென்னைமண்டல நிர்வாகிகள் ஆலோசனைக்கூட்டம் தலைவர் புரட்சித் திலகம் அவர்களின் தலைமையில் சென்னை தலைமை அலுவலகத்தில் நடைபெற்றது**

அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின் சென்னை மண்டலத்திற்குட்பட்ட சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம் மாவட்டச் செயலாளர்கள், தொகுதிச் செயலாளர்கள், நகர, ஒன்றிய செயலாளர்கள் பகுதி செயலாளர்கள் மற்றும் அனைத்து அணி நிர்வாகிகள் ஆலோசனைக்கூட்டம் 28.06.2016 இன்று 2.30 மணிக்கு கட்சி தலைமை அலுவலகத்தில் உள்ள பாரதியார் அரங்கத்தில் என்னுடைய தலைமையில் நடைபெற்றது. பெருந்தலைவர் மற்றும் தலைவர் பிறந்தநாளை முன்னிட்டு முப்பெரும் விழா ஏற்பாட்டுக்கான கருத்துக்கள் கூட்டத்தில் பகிரப்பட்டன. பொருளாளர் ஏ.என்.சுந்தரேசன், சென்னை மண்டலச் செயலாளர் எம்.ஏ.சேவியர், வர்த்தகரணிச் செயலாளர் திரு.கே.ஜே.நாதன், இளைஞரணி & மாணவரணிச் செயலாளர் திரு.சாமுவேல் மேத்யூ, மகளிரணி துணைச் செயலாளர் திருமதி.எம்.பாகீரதி, தலைமை நிலையச் செயலாளர் அக்வின் நோயல், கலை இலக்கிய அணி துணைச் செயலாளர் திரு.எம்.ராஜேந்திரன் ஆகிய மாநில நிர்வாகிகள், சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம் அனைத்து மாவட்டச் செயலாளர்களும் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினர். சென்னை மண்டலத்திற்குட்பட்ட அனைத்து தொகுதி, நகர, பகுதிச் செயலாளர்களும் கூட்டத்தில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

**நன்றி , வணக்கம்**
**உழைப்பவரே உயர்ந்தவர்**
**என்றும் அன்புடன்**

ஆர் சரத்குமார் B Sc.
**நிறுவனர் - தலைவர்**

***இத்துடன் புகைப்படம் இணைக்கப்பட்டுள்ளது***